# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,875 — 1931 ம் ஹூ ஆவணிமீ 14 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. —நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தேசாதிபதியவர்கள் புல்லர்ஸ் ரோட்டை கொழும்பு–காலி ரோட்டோடு சேர்த்தலாகிய ஒரு பகிரங்க தேள்வைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி எனக்குக் கற்பனை செய்திருப்பதினால் :

பிரதமபட்டத்து இலக்கம் 20,276. கொள்ளுப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லொறிஸ் ரோட்டு, 38 ம் லேன் 5 ம் நம்பர் பேரால் வரி கொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், பூங்கன்று பாத்திகளும், கற்சுவரின் பகுதியின் அரைவாசியும், மரக்கதவின் பகுதியும், பழைய ரோட்டின் பகுதியிலுள்ள மரக்கேற்றும் உளது | இ. வி. சத்துருகுலசிங்க கோட்டடி, கொழும்பு | 0 0 1·55 |
| 2 | லொறிஸ் ரோட்டு 38 ம் லேன் 5 ம் நம்பர் பேரால் வரி கொடுக்கும் காணியின் பகுதி | தோட்டம், ஓடுபோட்ட கற்கட்டிடத்தின் பகுதியும், கல்விறுந்தையின் பகுதியும், கற்கானின் பகுதியும், கற்படியும் ஒரு பரிசோதனை துவாரமும், கான்பைப்பின் பகுதியும், ஒரு கல்லியும், கற்சுவர்களின் பகுதிகளும், தகரத்தாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சேர்மானமுள்ள ஓடுபோட்ட கற்கட்டிடத்தின் பகுதியும், மரக்கேற்றின் பகுதியும், 20–30 வருஷ இரண்டு தென்னமரங்களும், 25 வருஷ ஒரு பிலா மரமும் உளது | ஷை .. | 0 0 14·42 |
| | | | | 0 0 15·97 |

மேற்சொல்லப்பட்ட காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும், தாமாக அல்லது அவரவருடைய காரியகாறர் மூலமாய் 1931 ம் ஆண்டு செப்ரெம்பர்மீ 7 ந் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்க கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடைமைகளின் தன்மைக்கும், அவ்வுடைமைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்று உறுதிகளாலும், பதிவுசொப்பிகளாலும் சபாநாயகருக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணிகளிலுள்ள உடைமைகளின் தன்மையையும் அவ்வுடைமைகளுக்காய் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்க கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஹூ ஆக்கஸ்ற்மீ 14 ந் திகதி.

டபிள்யு. ரி. ஸ்ரேஸ்,
நகரசங்க சபாநாயகரும் கொழும்பு நகராதிகாரியும்.

243——J. N. 11712–127 (8/31).

T 1

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஜயல—கொற்றதேனியாவ ரோட்டு திருத்துதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது:—

பிரதமபடம் இலக்கம் 19,716. கிராமம்—பற்ருண்டுவன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வல்யபாலடம் தோட் | தென்னையும் றப்பர் தோட்டமும், 28 தென்னையும் 8 றப்பர் மரமும் 69 கமுகுவுமுள்ளது | முடிக்குரியவும் டீ. எஸ். பேர்நாந்துவுக் குரியதும் | 0 1 23 |
| 2 | ஷை .. | தென்னையும் றப்பர் தோட்டமும், 4 தென்னையும் 6 றப்பர் மரமுமுள்ளது | ஷை .. | 0 0 8·3 |

பிரதமபடம் இலககம் 19,717. கிராமம்—பற்ருண்டுவன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வல்யபாலடம் தோட் | தென்னந்தோட்டம் 8 தென்னையுள்ளது .. | முடிக்குரியவும் டி. எஸ். பேர்நாந்துவுக் குரியதும் | 0 0 8·4 |
| 3 | ஷை .. | தென்னையும் றப்பர் தோட்டமும், 9 தென்னையும் 5 றப்பர் மரமும் 4 கயு மரமுமுள்ளது | ஷை .. | 0 0 6·2 |
| 5 | ஷை .. | தென்னையும் றப்பர் தோட்டமும் 7 தென்னையும் 6 றப்பர் மரமுமுள்ளது | ஷை .. | 0 0 5·6 |
| 6 | ஷை .. | தென்னையும் றப்பா தோட்டமும், 24 தென்னையும் 15 றப்பர் மரமும், 4 றப்பர் பூண்டும், 1 கயுமரமும், 7 கமுகுவும் 1 பலாவுமுள்ளது | ஷை .. | 0 0 20·7 |
| 8 | ஷை .. | தென்னையும் றப்பர் தோட்டமும், 4 தென்னையும், 3 றப்பர் மரமும் 1 கமுகுவுமுள்ளது | ஷை .. | 0 0 4·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931ம் ௵ புரட்டாசி மாசம் 14 ௳ தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ம் ௵ ஆவணிமீ 10 ௳

எச். பீ கொவ்மென்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தொற்றுநோய் உள்ள வீடுகளில் வசிப்பவர்களைப் பிரத்தியேகமாக வைப்பதற்குள்ள கட்டிடத்தை விசாலித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,094. குறிச்சி—கண்டி நகரசங்க எல்லைக்குட்பட்ட தேயன்னவல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஹப்புகஸ்பிட்டியாவத்தை ஆஸ்பத்திரி ரோட்டு வீட்டு இல. 17 | தோட்டம் .. | தேயன்னவலைப் பூலா என்பவரின் உரித்தாளிகள் :— டீ. ஏற்ச், கஹவா, அலுத்நுவரை, டீ. ஏற்ச். மெனிக்கி, டீ. ஏற்ச். றஙகிரி, டீ. ஏற்ச். உக்குவா, டீ. ஏற்ச். பொடிசிங்கோ, தேயன்னவல | 0 2 1·48 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ செப்ரம்பர் மாசம் 18 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1931 ம் ௵ ஆகஸ்ட்மீ 10 ௳.

டபிள்யு. டி. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் லேவல்லைக்கு ஓர் பிரசித்த கக்கூசு கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,096. குறிச்சி—கண்டி நகரசங்க எல்லைக்குட்பட்ட தல்வத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மாளிகாவத்தை லேவல்லை ரோட்டு வீட்டு இலக்கம் 40 ன் பாகம் | பாழநிலம் .. | தலதமாளிகாவின் பராமரிப்புக்காரர், குத்தகைகாரன் கே. வி. விஜயசிங்க, தல்வத்தை ஆராச்சி; உபகுத்தகைகாரர்: உவில்லியம் அண்ட் றிச்செட்ஸ், புளோறிஸிற்ஸ், கொழும்பு | 0 0 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின்பிரகாரம மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ செப்றெம்பர்மாசம் 18 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தித் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1931 ம் ஸ்ரீ ஆக்கஸ்டு மீ 10 ந் உ.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புகைரதப் பாதையின் பாதுகாப்புக்காகக் குளக்கட்டை வெட்டிவிடுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும்காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,046. குறிச்சி—வண்ணன் கல்லுப் புளியங்குளம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வண்ணன்கல்லு கமம் | நெல்வயல் | மாரிமுத்து, ஆறுமுகமும் மகன் கந்தையாவும் (ஒருமித்து) அலைகல்லுப் போட்டகுளம் | 6 | 3 | 20·4 |
| 2 | ஷை | ஷை | பழனி நாகலிங்கம் (மைனர்) மாரிமுத்து பழனியின் மகன் அலைகல்லுப் போட்டகுளம் | 2 | 0 | 32·4 |
| 3 | ஷை | ஷை | மாரிமுத்து ஆறுமுகம் அலைகல்லுப் போட்டகுளம் | 0 | 2 | 0·8 |
| 4 | ஷை | ஷை | கறுப்பன் இராமசாமி வண்ணன் கல்லுப் புளியங்குளம் | 2 | 1 | 15 |
| 5 | வண்ணன்கல்லு காடு | பாண்நிலம் | முடியும் கறுப்பன் இராமசாமியும், வண்ணன் கல்லு புளியங்குளம் | 0 | 0 | 22·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ புரட்டாதி மாசம் 29 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு வவுனியா கோட்டுவீட்டில் என்முன்பாக வெளிப்படுத்தித் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

முல்லைத்தீவு கச்சேரி,
1931 ம் ஸ்ரீ ஆவணிமீ 11 ந் உ.

ஆர். எஸ். வீ. பொலியர்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

## கிருஷிகர் பாடசாலை, யாழ்ப்பாணம்.

### தலைமைக்காறருக்கும் உபாத்திமாருக்கும் சுயபாஷையில் கற்பனைப் படிப்பு.

ஒவ்வொரு வருஷமும் புரட்டாதி மாசத்துக்கும் வைகாசி மாசத்துக்கு மிடையில் சுயபாஷையில் தலைமைக்காறருக்கும் தமிழ்ப் பள்ளிக்கூட உபாத்திமாருக்கும் போதனை நடத்தப்படும். வசிப்பதற்கு இடமும் ஒழுங்கு செய்யப்படும். குறிப்பிடுவதற்குப் புஸ்தகமும் கிரயமின்றிக் கொடுக்கப்படும். பள்ளிக்கூடத்தில் வசிக்குங் காலத்தில் தலைமைக்காறர் ஒவ்வொருவருக்கும் மாத வீதம் 15 ரூபாவும் உபாத்திமாருக்கு தங்கள் சம்பளத்தைவிட 5 ரூபா வீதமும் கொடுபடும். 1931–32 வகுப்பு வருகிற செப்டம்பர் மாதம் 18 ந் திகதி ஆரம்பமாகும்.

10 உபாத்திமாரையும் 10 தலைமைக்காறரையுந்தான் சேர்க்க முடியும்.

தலைமைக்காறர் தங்கள் மனுப்பத்திரத்தை வடமாகாண ஏசண்டரவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

உபாத்திமாருடைய மனுப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பள்ளிக்கூடப் பரிசோதகருக்கு அனுப்பப்பட வேண்டும்.

டபிள்யு. யங்மன்,
கிருஷிகாத் தலைவர்.

கிருஷிகா பகுதி.
பேராதனை, 1931 ம் ஸ்ரீ ஆவணிமீ 4 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்பு டிஸ்திறிக் சீயனுகோறலே கங்கபொடபத்துவே பேலகலேயில் இருக்கும் டொன் திமோதியஸ் அமரகோன் ஆகிய நான் இலங்கை அரசாட்சியாரின் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் செடியூல் 1B ன் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் மூன்று மாசத்துக்கு பின் கேகல்ல டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்க்கிறதற்கு றிஜிஸ்றார் ஜெனறல் அவர்களுக்கு மனுச்செய்வேன் என்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

பேலகலே, டி. ரி. அமரகோன்,
1931 ம் ஸ்ரீ ஆடிமீ 20 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.